<u>2026 ஆகஸ்ட் மாதம் 11– ஆம் தேதி செவ்வாய்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 131/2025</u>

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11– ஆம் தேதி செவ்வாய்கிழமை

திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW13 (LW21) – முருகன் |
| தகப்பனார் பெயர்: | பெரியகருப்பன் |
| ஊர்: | கம்பம் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கிராம நிர்வாக அலுவலர், கம்பம் |
| வயது : | 50 |

11.08.2026

(1வது எதிரி ஆஜர். 2, 3 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு, அவரது பணியாளர் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தற்சமயம், தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கம்பத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 28.07.2025ம் தேதியன்று அனுமந்தன்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்தில் பணியாற்றியபோது, உத்தமபாளையம் காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து காவலர் வந்து, கிராம நத்தம் புல எண்.420/05 சம்பந்தமாக சான்று கோரி தபால் அளித்தார். கிராம கணக்கிலிருந்து இருந்த பட்டாதாரர் பெயர் பால்சாமி தேவர்

மகன் சுந்தரபாண்டியன் (எ) சுந்தர் பெயரில் தனிப்பட்டா உள்ளத என்று சான்று வழங்கினேன். சான்றுடன் பட்டா எண்.1889—ன் கணினி நகலையும் வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் பட்டா மற்றும் சான்று நான் கொடுத்தது தான். அந்த பட்டா மற்றும் சான்று **அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை —</u>**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அவகாசம் வழங்கப்பட்டும் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**<u>மறு விசாரணை</u>** :— இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 11.08.2026 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.08.11 18:07:39 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
11.08.2026